1967 ஜூலை 18]

Sale of rice at low price

*404 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state.—

(*a*) whether it is a fact that some sympathisers of the party in power running the Government, sold rice at a considerably low price in various areas like Triplicane, Teynampet, Royapettah, Kodambakkam, Alandur and Tambaram on 23rd February 1967 ;

(*b*) if so, whether it is still being sold at that price ; and

(*c*) how does that price compare with the price of rice sold in Government ration shops ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) முதல் (உ) வரை திருவல்லிக்கேணி, தேனாம்பேட்டை, ராயப்பேட்டை, கோடம்பாக்கம் போன்ற இடங்களில் 23—2—1967 அன்று விற்ற விலையை விட அரசாங்கப் பங்கீட்டுக் கடைகளில் விற்கப்படும் அரிசியின் விலை குறைவா, அதிகமா என்று கேட்கிறார்கள். அப்படி விற்றதா என்றால் அதுபற்றி அரசாங்கத்தினிடம் தகவல் இல்லை. திருவல்லிக்கேணியில் விற்றார்கள் என்றால், அங்கத்தினர் அவர்கள் திருவல்லிக்கேணியில் இருக்கிறார்கள். அவர்கள் அப்படி வாங்கினாரா இல்லையா என்று தெரியவில்லை. கிடைக்காததால் அப்படிச் சொல்கிறார்களோ என்று தெரியவில்லை. அதுபற்றிய தகவல் அரசாங்கத்திற்கு இல்லாததால் அந்த விலைக்கும் அரசாங்க விலைக்கும் உள்ள வேறுபாடு பற்றிய கேள்வி எழவில்லை.

திரு. கே. விநாயகம் : 23—2—1967 நாள்தான் நாம் எல்லாம் வெற்றி பெற்றதோ அல்லது தோல்வி பெற்றதோ என்பதையெல்லாம் வானொலியில் விளக்கம் செய்யப்பட்டது. அன்று, இன்று ஆட்சியில் உள்ள கட்சிக்காரர்களின் நண்பர்கள் அரிசியை அன்றிருந்த விலைக்கு அதிகமான விலை கொடுத்து வாங்கி இவர்கள் வெற்றி பெற்றதை விழாவாகக் கொண்டாடவேண்டுமென்று அதற்குப் பெயரும் தந்து ஒன்றும் தொடர்பில்லாத வகையில் அண்ணா அரிசி, எம். ஜி. ஆர். அரிசி, கருணாநிதி அரிசி, விநாயகம் அரிசி என்று திருத்தணியில் கூட விற்றார்கள்—இப்படி அதிகவிலைக்கு அரிசியை வாங்கி குறைவான விலைக்கு விற்றது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் சொல்கிறேன். அப்படி விற்றிருக்கலாம். ஆனால் அரசாங்கத்திற்கு அதுபற்றிய தகவல் இல்லை. அன்றைய நாளில், சரித்திரப் பிரசித்தி பெற்ற நாளில் அவர்கள் அதிக விலைக்கு வாங்கி குறைந்தவிலைக்கு விற்றது என்பது தானம் கொடுப்பதுபோல்தான் அர்த்தம். அரிசி தானம் என்று நீங்கள் வைத்திருப்பதுபோல் வைத்துக்கொள்ளலாம். ஆனால் அரசாங்கத்திற்கு அது பற்றி எந்தவிதமான தகவலும் இல்லை. அந்த அரிசி அந்த விலையில் அங்கத்தினர் அவர்களுக்கு கிடைக்காததால் சொல்கிறார்களோ அல்லது பெற்றுக்கொண்ட மகிழ்ச்சியால் சொல்கிறார்களோ என்று தெரியவில்லை.

திரு. எஸ். முருகையன் : இருபது ஆண்டு ஆட்சியிலிருந்து மக்கள் விடுபட்ட காரணத்திற்காக பல ஊர்களில் ஏழை மக்களுக்கு இலவசமாக அரிசி கொடுக்கப்பட்டது உண்மையா ? திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள், திருத்தணியில் கூட விற்றார்கள் என்று. அது நியாயமான விலையில் விற்கப்பட்டதா ? அல்லது ப்ளாக் மார்க்கெட் விலையில் விற்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தங்கள் மகிழ்ச்சிப்பெருக்கில், இருபது ஆண்டுகளாக இருந்த அரசின் மாற்றத்தை தமிழகம் உற்சாகத்தோடு வரவேற்கிறது என்பதற்கு அறிகுறியாக எவ்வளவோ விதமான உற்சாக வெளியீட்டினை மக்கள் பல்வேறு வகைகளில் பின்பற்றியிருக்கலாம்.